**செ.வெ.எண்.91** **நாள்.15.02.2018.**

**திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டாரத்தில் நடைபெற்று வரும் வேளாண்மை திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ..ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.**

செங்கோட்டை வட்டாரத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வேளாண்மை திட்டப்பணிகளை இன்று (15.02.2018) ஆய்வு மேற்கொண்டார். செங்கோட்டை வேளாண் விரிவாக்க மையத்தில் விவசாயிகளுக்கு இடுபொருட்கள் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் சூரிய விளக்குபொறி ரூ.2000/- மானியத்திலும், NMOOP-MM-I திட்டத்தின் கீழ் பெருவிளக்கத்திடல் விவசாயிக்கு ரூ.7500/- மானியத்தில் நிலக்கடலை விதை, நூண்ணூட்ட உரம், உயிர் உரம் ஆகியவை மானியத்தில் வழங்கினார்கள். தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் விவசாயிக்கு சுழற்கலப்பை ரூ.35,000/- மானியத்தில் வழங்கினார்கள்.

மேலும் மாநில தென்னை நாற்று பண்ணை ஆய்வு செய்து தென்னை நாற்று பண்ணையில் கன்றுகள் உற்பத்தி, தென்னை ஒட்டு கட்டும் முறையை பார்வையிட்டு, ஊசுயு முறையில் தென்னங்கன்று நடவு செய்தார்கள். கட்டளை குடியிருப்பு பண்ணை தோட்டத்தில் மண்புழு உற்பத்தி செய்யும் முறைகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். கீழப்பாவூர் வட்டாரத்தில் அத்தியூத்து கிராமத்தில் நெல் வரப்பு பயிராக எய்சா முறையில் கேந்தி பயிர் சாகுபடி செய்த வயலினை மாவட்ட ஆட்சித் தலைவர் ஆய்வு செய்த போது நன்மை தரும் பூச்சிகள் இருப்பதனை பார்வையிட்டார்கள்.

நிகழ்வின் போது வேளாண்மை இணை இயக்குநர் திரு.இல.பெருமாள் அவர்கள், மாட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் திருமதி.சாந்திராணி அவர்கள், வேளாண்மை உதவி இயக்குநர் திரு.நல்லமுத்துராஜா அவர்கள், வேளாண்மை அலுவலர் நபிஷா அவர்கள், துணை வேளாண்மை அலுவலர்கள் திரு.சண்முகசுந்தரம், திரு.ஷேக் முகைதீன், உதவி வேளாண்மை அலுவலர்கள் திரு.அருணாச்சலம், திரு.நாகராஜன், திரு.உத்தமன், உதவி விதை அலுவலர் திரு.திருப்பதி, அட்மா திட்ட அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.